**<u>சார்பு நீதிமன்றம், இராணிப்பேட்டை</u>**

**HMOP.NO.82/2019** **தேதி.09.06.2025**

**இந்த நீதிமன்ற உதவியாளர் நிலை – 2 திருமதி. கலைவாணி என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு ............... எ.மா.சா.1 ...................... சாட்சியின் வாக்குமூலம் 1973 ஆம் ஆண்டு 10வது சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு 2024ம் ஆண்டு 09.06.2025ம் நாளில் பதிவுச் செய்யப்பட்டது.**

| | | |
|---|---|---|
| பெயர் | : | பிரேமா |
| க/பெ. | : | ஆசைதம்பி |
| வயது | : | 58/2025 |
| தொழில் | : | இல்லத்தரசி |
| இனம் | : | பெண் |
| கிராமம் | : | ஆற்காடு |
| வட்டம் | : | ஆற்காடு |
| மாவட்டம் | : | இராணிபேட்டை |

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:–

எனக்கு மனுதாரருடன் திருமணம் ஆகி 38 வருடங்கள் ஆகிறது. திருமணத்தின் பந்தமாக எனக்கும் எதிர்மனுதாரருக்கும் 2 மகள்கள் பிறந்தனர். 2 பிள்ளைகளுக்கும் மனுதாரர் நல்ல முறையில் படிக்க வைத்து திருமணம் செய்துவைத்து அவர்கள் நன்றாக வாழ்ந்து வந்தார்கள் என்றால் சரிதான். நான் 2 பிள்ளைகளுக்கும் நகைகளை கொடுத்தேன். என் கணவர் பிள்ளைகளுக்கு திருமண செலவை பார்த்தார். என்னுடைய சொந்த ஊர் பாண்டிச்சேரி. என்னுடைய பெற்றோர்கள் பாண்டிச்சேரியில் வசித்து வருகிறார்கள்.நானும் மனுதாரரும் ஒரே வீட்டில் பக்கத்து பக்கத்து

ரூபில் வசித்து வருகிறோம். வழக்கு தாக்கல் செய்து 6 வருடங்களாக ஒரே வீட்டில் தனித்தனியாக வசித்து வருகிறோம். என் மாமியார் ஒரு வருடங்களுக்கு முன் இறந்து விட்டார். என் மாமியார் இறப்பதற்கு முன்பு மேல் மாடியில் வசித்து வந்தார் என்றால் சரிதான். மேலே அவர் வசித்து வந்தபோது நான் துணைக்கு போவேன். என் மாமியார் தனியாக சமைத்து அவரே சாப்பிட்டு வந்தார் என்று சொன்னால் ஒரு காலகட்டத்தில் அவராவல் தனியாக சமைக்க இயலவில்லை. அவர் மகள் சமைத்து வந்தார். நானும் சமைத்து கொடுப்பேன். என் மாமியார் எதற்காக மாடியில் தனியாக குடும்பம் செய்தார் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. என் கணவருடன் பிறந்தவர்கள் ஒரு தம்பி, 2 தங்கை ஆவார்கள். என் மைத்துனரும், என் நாத்தனார்களும் வர, போக இருந்தார்களா என்றால் முன்பு வந்து போனார்கள். தற்போது வருவதில்லை. 6 வருடங்களாக என் கணவருடன் பிறந்தவர்கள் என்னுடன் பேசுவார்களாக என்றால் பேசுவதில்லை வெளியில் எங்காவது பார்த்தால் பேசுவேன். எனக்கும் மனுதாரருக்கும் 2018 லிருந்து கருத்துவேறுபாடு ஏற்பட்டது. 2018 க்கு முன்பு நானும் என் கணவரும் பிரச்சனை இல்லாமல் இருந்தோம்.2018 க்கு முன்பு நான் மனுதாரருடன் அடிக்கடி சண்டைபோட்டுக்கொண்டு பாண்டிச்சேரிக்கு சென்றுவிடுவேன் என்றால் சரியல்ல. 2018 க்கு பிறகு எனக்கும் மனுதாரருக்கும் என்ன காரணத்திற்காக பிரச்சனை ஏற்பட்டது என்றால் என் தந்தை இறந்தபிறகு என் தாய் வீட்டு சொத்து வராததால்தான் பிரச்சனை ஏற்பட்டது. என் பெற்றோர் சொத்துக்கள் எனக்கு கொடுத்தார்களா என்றால் கொடுத்தார்கள். என் தந்தை இறந்த பின்பு பிரிக்கப்படாதா சொத்துக்கள் இருக்கிறாதா என்றால் என் தந்தை இறந்தபிறகு எனக்கு சொந்தமான சொத்தையும், என் தாயார் சொத்தையும் என் தம்பிகள் எடுத்துக்கொண்டார்கள். 2018 க்கு முன்பு எனக்கும் என்

கணவருக்கும் பிரச்சனை ஏற்பட்டு 6 மாதங்கள் நான் பாண்டிச்சேரியில் என் பெற்றோர் வீட்டில் வசித்து வந்தேன் என்றால் சரியல்ல. நான் மனுதாரர் மீது மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேனா என்றால் நான் இராணிப்பேட்டை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன். எதற்காக புகார் கொடுத்தேன் என்றால் என் வீட்டில் யாரோ ஒரு நபர் வந்துபோனதாக என் கணவரான மனுதாரர் வந்து போனதால் நான் காவல் நிலையத்தில் புகார் கொடுது்தேன். என் கணவரை காவல் நிலையத்தில் அழைத்து விசாரணை செய்து அவமானப்படுத்தி அனுப்பினார்கள் என்றால் அனுபற்றி தெரியாது. யாரோ ஒரு நபரை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் அழைத்து விசாரணை செய்தார்களா பொய்யான நபர் என்பதால் அழைத்து விசாரணை செய்யவில்லை. பரத் என்ற நபர் குறித்து என் கணவர் கூறியுள்ளது தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. பரத் என்ற நபர் எதிர்வீட்டில் குடியிருந்து வந்தார் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. நாங்கள் பிரிவதற்கு முன்பு நானும், மனுதாரரும் தினந்தோறும் சண்டைபோட்டுக்கொள்வோம் என்றால் சரியல்ல. நேற்றுகூட நான் மனுதாரருடன் சண்டைபோட்டேன் என்றால் சரியல்ல. கடைசியாக நான் எப்போது மனுதாரருடன் சண்டை போட்டேன் என்றால் நான் எப்போதும் மனுதாரரரை சண்டை போடவில்லை. மனுதாரரை நான் வாய்க்குவந்தபடி திருட்டுவேன் என்றால் நான் திட்டுவதில்லை. நான் என்ன செய்வேன் என்றால் நானே தனியாக புலம்பிக்கொண்டே இருப்பேன். நான் மனுதாரர் போகும்போதும், வரும்போது மனுதாரரை பார்த்து புலம்பிக்கொண்டே இருப்பேன் என்றால் சரியல்ல. என் மாமியாரை நான் கண்டபடி பேசியதால்தான் என் மாமியார் தனியாக முதல் மாடிக்கு சென்றுவிட்டார் என்றால் சரியல்ல. கடைசி காலத்தில் என் மாமியார் தனியாக சமைத்து

சாப்பிட்டுக்கொண்டிருந்தார் என்றால் சரியல்ல. என் கணவரை நான் மதிப்பதில்லை என்றும் வாய்க்குவந்தபடி திட்டிக்கொண்டிருப்பேன் என்றால் சரயல்ல. என் கணவருக்கு கொடுக்கவேண்டிய மரியாதையை நான் கொடுப்பதில்லை என்றும் மனுதாரருக்கு சமைத்து கொடுப்பதில்லை என்றால் சரியல்ல. என் 2 பிள்ளைகளையும் மனுதாரர்தான் படிக்கவைத்தார் என்றும் என் மகள்களையும் அவர்தான் கவனித்து வந்தார்என்றால் சரியல்ல. என் மகள்களுடன் நான் சுமுகமான உறவு வைத்துக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. நான் மனுதாரரை கொடுமை செய்ததால்தான் தனியாக வந்துவிட்டார் என்றால் சரியல்ல. எனக்கு பரத் என்ற நபருடன் தொடர்பு இருந்தால் நான் மனுதாரரை ஒத்துவிட்டேன் என்றால் சரியல்ல முற்றிலும் தவறானதாகும். நான் மனுதாரரை பல நேரங்களில் அடித்துள்ளேன் என்றால் சரியல்ல. எனவே தான் என்னுடன் மனுதாரர் சேர்ந்து வாழ முடியாத நிலை ஏற்பட்டதால் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. மனுவில் மனுதாரர் கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

மறு விசாரணை :- இல்லை.